தினகரன்
10-03-2025

இந்து, கிறிஸ்தவர், இஸ்லாமியர் என

மக்களை பிரித்து ஆட்சியில் நீடிக்க விரும்புகிறது பாஜ

மதுரையில் திருமாவளவன் சாடல்

மதுரை, மார்ச். 10: மதுரையில் நடந்த மத நல்லிணக்க மாநாட்டில் பங்கேற்ற விசிக தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி, இந்து, கிறிஸ்தவர், இஸ்லாமியர் என மக்களை பிரித்து ஆட்சியில் நீடிக்க விரும்புகிறது பாஜ என்று கூறினார்.

மதுரை, கே.கே.நகரில் மக்கள் நல்லிணக்க கூட்டமைப்பு சார்பில், மதநல்லிணக்க மாநாடு நேற்று நடைபெற்றது. இதில் மதுரை எம்.பி வெங்கடேசன் பேசும்போது, "1990களில் ஆர்எஸ்எஸ் கும்பல் பல்வேறு முயற்சிகளை செய்து தோற்றுப் போய் ஓடினர். இன்று மீண்டும் பிரச்னைகளை உருவாக்கி வருகின்றனர். ஒன்றிய அரசின் உதவியுடன் இந்த வேலைகளை செய்கின்றனர். மேலூர் பகுதியில் உள்ள அரிட்டாபட்டி மலையில் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்க ஏலம் விட்ட இவர்கள், இன்றைக்கு திருப்பரங்குன்றம் மலையை பாதுகாக்கிறோம் என்கின்றனர். வழிபாட்டு பழக்கங்கள் அவரவர் நம்பிக்கை. இதில் பாஜ, ஆர்எஸ்எஸ் தலையிட வேண்டிய அவசியம் இல்லை" என்றார்.

இதையடுத்து விசிக தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி பேசியதாவது: தமிழ்நாடு முதல்வர் மதவாத சக்திகளை எதிர்த்து போராடி வருகிறார். ஒவ்வொருக்கும் அவரவர் மதத்தின் மீது நம்பிக்கை உண்டு. அதனை பின்பற்றினால் மதநல்லிணக்கம் துளிர்க்கும். அதை புரிந்து கொள்ளத்தான் இந்த மாநாடு. நாம் இந்து சமூகத்தை விமர்சிக்கிறோம் எனக் கூறுகிறார்கள். இந்து மத நம்பிக்கை வேறு. அதனை பயன்படுத்தி அரசியல் செய்வது வேறு. மத குருமார்களை வைத்து அரசியல் செய்வதை நாம் கண்டிக்க வேண்டும்.

இந்த சூழ்ச்சியை புரிந்து கொள்ள வேண்டியது இந்து மதப்பற்றாளர்கள், குருக்கள் தான். சங்கராச்சாரியார்கள் பாஜவை கண்டிக்காமல் இருக்கிறார்கள். சிறுபான்மையினர் மீது வெறுப்பை விதைக்கிறார்கள். நாம் அனைவரும் இந்தியன் என்ற உணர்வில் வெள்ளையனை வெளியேற்ற போராடினோம். இங்கே பாஜ கிறிஸ்தவர், இஸ்லாம் என பிரித்தாளும் சூழ்ச்சியால் ஆட்சியில் நீடிக்க பார்க்கிறார்கள்.

ஓபிசி மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு கொடுக்கக்கூடாது என, பாஜவினர் வன்முறையை கட்டவிழ்த்து விட்டார்கள். ஆனால் பொருளாதாரத்தில் நலிவடைந்த முன்னேறிய பிரிவினருக்கான இட ஒதுக்கீட்டை ஒரே நாளில் கொண்டு வந்து, ஓபிசி பிரிவினருக்கு துரோகம் செய்தார்கள். இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வேண்டும் என்றால், மத நல்லிணக்கத்தையும் பாதுகாக்க வேண்டும். இவ்வாறு கூறினார்.

இதில், மதிமுக மாநில பொருளாளர் செந்தில திபன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் ஹாலிதீன், எஸ்டிபிஐ கட்சி தலைவர் நெல்லை முபாரக் மற்றும் பல்வேறு அமைப்புகளை சேர்ந்தோர் கலந்து கொண்டனர்.